2026 ஜூலை மாதம் 15– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 142/2025

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW3 (LW5) – கருப்பசாமி |
| தகப்பனார் பெயர்: | ராஜூ |
| ஊர்: | போடிநாயக்கனூர் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | தலைமை காவலர், போடிநகர் காவல்நிலையம் |
| வயது : | 41 |

15.07.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், போடிநகர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்தின்போது போடி தாலுகா காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 20.08.2023 ம் தேதி போடி தாலுகா காவல்நிலைய குற்ற எண்.269/2023 பிரிவுகள் 4(b) of Explosive Substances Act & 286 I.P.C.,ன்படியான வழக்கில் கைப்பற்றப்பட்ட செயலிழக்கப்பட்ட வெடிப்பொருட்களின் கருப்பொருட்களை 20.03.2024 ம் தேதி போடிநாயக்கனூர், கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அவர்களிடம்

ஒப்படைத்து, R.P.R.No.538/2023 பெற்று, செயலிழக்கப்பட்ட வெடிப்பொருட்களின் கருப்பொருட்களை சென்னை, தடய அறிவியல் வெடிபொருட்கள் பிரிவில் ஒப்படைக்கும் அலுவலாக நியமிக்கப்பட்டேன்.

2. அதன்பேரில் போடிநாயக்கனூர், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற உத்தரவு கடிதம் எண்.543/2024 பெற்று 21.03.2024ம் தேதியன்று சென்னை, தடய அறிவியல் வெடிபொருட்கள் பிரிவில் ஒப்படைத்தேன். அதனுடன் செயலிழக்கப்பட்ட வெடிபொருட்களின் கருப்பொருட்களை பிளாஸ்டிக் டப்பாவில் அடைக்கப்பட்டு, சீல் வைக்கப்பட்டு, கருப்பொருட்களை ஒப்படைத்தேன். 22.03.2024ம் தேதியன்று காவல் ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய காவலஅவகாசம் வழங்கியும், குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 15.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.15 15:35:54 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
15.07.2026